**ஏப்ரல் – 09**

# TNPSC துளிகள்

- தேர்தல் ஆணையத்தின் முயற்சிகளுக்கு உதவி செய்யும் வகையில் சென்னை சுங்கத் துறை அமைப்பானது "நீலக் கழுகு நடவடிக்கை (ஆபரேஷன் புளு ஈகில்)" எனப்படும் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
    - இந்த நடவடிக்கையானது தமிழ்நாட்டில் வாக்காளர்களைக் கவர்ந்திழுக்க பணம் மற்றும் மதிப்பு மிக்க பொருட்களைக் கடத்தி அவற்றை மக்களுக்கு வழங்கும் கும்பல்களைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும்.
- சர்வதேச தலையணைச் சண்டை தினமானது உலகின் பல நகரங்களில் கொண்டாடப் படும் ஒரு நிகழ்வாகும்.
    - இது ஏப்ரல் மாதத்தின் முதல் சனிக்கிழமையன்று கொண்டாடப்படுகிறது.
- ஏப்ரல் 6 ஆம் நாளை மேம்பாடு மற்றும் அமைதி ஆகியவற்றிற்கான விளையாட்டின் சர்வதேச தினமாக அறிவிக்கும் முடிவை ஐ.நா.வின் பொதுச் சபை 2013 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் மேற்கொண்டது.
    - சமூக உள்ளடக்கம், பாலினச் சமத்துவம் மற்றும் இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல் போன்றவற்றிற்கான சக்தி வாய்ந்த ஒரு கருவியாக விளையாட்டு இருப்பதாக யுனெஸ்கோ நம்புகிறது.
- ருவாண்டாவில் வாழும் துட்சி மக்களுக்கு எதிராக 1994 ஆம் ஆண்டில் நடைபெற்ற இனப்படுகொலையை நினைவு கூறும் வகையில் ஏப்ரல் 7 ஆம் தேதியினை நினைவு நாளாக யுனெஸ்கோ கடைபிடிக்கிறது.
    - இத்தினம் ஹுட்டு தீவிரவாத அரசினால் துட்சி சிறுபான்மையினருக்கு எதிராக நடத்திய இனப்படுகொலையின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

# தேசியச் செய்திகள்

## ஓட்டுனர் உரிமத்திற்கான தேசியப் பதிவேடு


- சமீபத்தில் சாலைப் போக்குவரத்து அமைச்சகமானது ஓட்டுனர் உரிமத்திற்கான தேசியப் பதிவேடு உருவாக்கப்படும் என அறிவித்துள்ளது.
- நாட்டில் போலியான ஓட்டுநர் அட்டைகளை ஒழிப்பதற்காக இம்முடிவு மேற்கொள்ளப் பட்டது.
- பெரும்பாலான மாநிலங்கள் ஏற்கனவே தேசியத் தகவல் மையத்தின் சாரதி என்ற தளத்தில் பதிவு செய்துள்ளன.
- இந்த மாநிலங்களுக்குப் புதிதாக உருவாக்கப்பட்ட தேசியப் பதிவேட்டிற்கு மாறுமாறு வலியுறுத்தப் பட்டுள்ளது.

## அரியவகை நோய்களுக்கான தேசியக் கொள்கை

- சமீபத்தில் சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகமானது அரிய வகை நோய்களுக்கான தேசியக் கொள்கை 2021 என்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இக்கொள்கை,
    - உள்நாட்டிலேயே ஆராய்ச்சி மேற்கொள்தல் மற்றும் மருந்துகளை

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தவும்,

- அரியவகை நோய்களுக்கான மருத்துவச் செலவைக் குறைக்கவும்,
- அந்நோய்களை முன்கூட்டியே தடுக்க அவற்றை ஆரம்பக் கட்டத்திலேயே ஆய்வு செய்து கண்டறிதல் போன்றவற்றையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




- அந்நோய்களை ஆய்வு செய்ய உயிரித் தொழில்நுட்பத் துறை அமைத்த நிதான் கேந்திராக்கள் உதவும்
- சுமார் எட்டு சுகாதார நிறுவனங்கள் அரிய வகை நோயின் சிறப்புமிகு மையங்களாக நியமிக்கப்பட்டு உள்ளன.
- இந்த மையங்களுக்கு ஒரே முறையாக ரூ.5 கோடி நிதி வழங்கப்படும்.
- அரிய வகை நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக ராஷ்டிரிய ஆரோக்ய நிதியின் கீழ், இந்திய அரசு ரூ.20 லட்சம் நிதி உதவி வழங்குவதாக அறிவித்துள்ளது.
- இந்த நிதி உதவி 40% மக்களுக்கு வழங்கப்படும்.
- பொதுவாக வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்கு மட்டுமே ராஷ்டிரிய ஆரோக்கிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.
- இந்தியாவில் காணப்படும் அரிய வகை நோய்கள்,
    - முதன்மை நோய் எதிர்ப்புக் குறைபாட்டு நோய்கள்,
    - நீர்மத்திசு அழற்சி (சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ்),
    - பாம்ப்பே நோய்,
    - கவுச்சர் நோய்,
    - பேப்ரி நோய்,
    - மேப்பிள் சிறுநீரக நோய் மற்றும் இதர பல ஆகியனவாகும்.

*குறிப்பு :*

- ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 28 ஆம் நாள் அரியவகை நோய் தினமாக அனுசரிக்கப்

படுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## H1B நுழைவு இசைவு (VISA) தடை நீட்டிக்கப் படவில்லை

- H1B நுழைவு இசைவிற்கான தடையை நீட்டிக்க அமெரிக்க அதிபர் ஜோ பிடன் இது வரை எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை.
- இந்தத் தடை கடந்த ஆண்டில் டிரம்ப் நிர்வாகத்தால் கொண்டு வரப்பட்டது.
- இந்தத் தடை மார்ச் 31 ஆம் நாளோடு காலாவதியாகிவிட்டது.
- H-1B என்பது குடியுரிமை பெறாதவர்களுக்கான (non - immigrant) ஒரு நுழைவு இசைவு ஆகும்.
- இந்த நுழைவு இசைவு, கருத்தியல் சார்ந்த அல்லது தொழில்நுட்ப நிபுணத்துவம் கொண்ட வெளிநாட்டுத் தொழிலாளர்களைப் பணி நியமனம் செய்ய அமெரிக்க நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளின் பொருளாதார மற்றும் சமூக கணக்கெடுப்பு 2021 அறிக்கை




- "கோவிட் 19 தொற்றுக்குப் பிந்தைய காலகட்டத்தில் மீண்டு வந்த பொருளாதாரங்களை நோக்கி" எனும் ஒரு தலைப்பிலான ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளின் பொருளாதார மற்றும் சமூக கணக்கெடுப்பு 2021 என்ற ஒரு அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கை ஐக்கிய நாடுகளின் ஆசியா மற்றும் பசிபிக் ஆகியவற்றிற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தால் (UNESCAP – பல Economic and Social Commission for Asia and Pacific) வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2021-22 நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7% அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- முந்தைய நிதி ஆண்டு பெருந்தொற்றின் தாக்கத்தின் காரணமாக வழக்கமான வர்த்தக நிலையில் 7.7% வீழ்ச்சியினைக் கண்டது.

***UNESCAP***

- UNESCAP என்பது ஆசியா-பசிபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகளின் ஒரு பிராந்திய வளர்ச்சிப் பிரிவு நிறுவனம் ஆகும்.
- இந்த அமைப்பில் இந்தியா உட்பட ஆசியா-பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த 53 உறுப்பினர் நாடுகளும் 9 துணை உறுப்பினர் நாடுகளும் உள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## செவ்வாயில் நில அதிர்வுகள்

- செவ்வாய்க் கிரகத்திலுள்ள நாசாவினுடைய இன்சைட் என்ற தரையிறங்கு விண்கலத்தில் (Lander) 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் இந்நாள் வரையில் 500 நில அதிர்வுகளுக்கும் மேலாக பதிவாகியுள்ளது.
- சமீபத்தில் ஏற்பட்ட அதிர்வுகள் 3.3 மற்றும் 3.1 என்ற அளவில் பதிவாகியுள்ளன.
- இவை செர்பெரஸ் ஃபாசே (Cerberus Fossae) எனப்படும் பகுதியில் இருந்து உருவாகி உள்ளன.
- செவ்வாய்க் கோளானது நில அதிர்வு ரீதியில் செயல்பாட்டில் உள்ளது என்பதை இந்தத் தகவல்கள் நிரூபணம் செய்கின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறன் புள்ளி விவரங்கள் அறிக்கை 2021

- இந்த அறிக்கை சர்வதேச புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறுவனத்தினால் (IRENA – International Renewable Energy Agency) வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கை, 2020 ஆம் ஆண்டில் உலகளவில் 260 GW புதிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ளதாக கூறுகிறது.
- காற்று மற்றும் சூரிய ஆற்றலின் 91% புதிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனுடன், 2020 ஆம் ஆண்டில் அதிகரிக்கப் பட்ட 80%க்கும் மேற்பட்ட அனைத்துப் புதிய மின்சார உற்பத்தித் திறன்களும் புதுப்பிக்கத்தக்க வகை ஆற்றலைச் சார்ந்தவை ஆகும்.
- உலகின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சந்தையான சீனா கடந்த ஆண்டில் 136 GW திறன் என்ற அளவிற்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனை நிறுவி உள்ளது.
- அமெரிக்காவானது 29 GW என்ற அளவிற்கு ஆற்றல் உற்பத்தித் திறனை நிறுவியுள்ளது.
- உலகளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறன் 30% ஆக உள்ளது.
- 2015 ஆம் ஆண்டு பாரீஸ் உடன்படிக்கையின் கீழ் ஒப்புக் கொண்டபடி, நீண்ட நாள் இலக்கினை அடையும் முயற்சியில் பல்வேறு நாடுகள் புதைபடிவ எரிபொருள்களிலிருந்துப் புதுப்பிக்கத்தக்க எரிபொருளுக்கு மாறி வருகின்றன.

# மாநிலச் செய்திகள்

## சட்டமன்றத்தில் புதிய விதிகள் – ஹரியானா அரசு

- மாநிலச் சட்டமன்றத்தின் ஒழுங்குமுறையை (decorum) கடைபிடிப்பதற்காக வேண்டி ஹரியானா மாநில அரசு பல்வேறு புதிய விதிமுறைகளை இணைத்துள்ளது.

- இந்த புதிய விதிமுறைகளின்படி, அவை, ஒவ்வொரு முறை கூடும்போதும் குறைந்த பட்சம் இரு அமைச்சர்கள் அதில் கட்டாயம் இடம் பெற்றிருக்க வேண்டும்.
- அங்கு ஏற்படும் அமளியின் போது, அவை உறுப்பினர்கள் ஆவணங்களைக் கிழிக்கக் கூடாது.
- அவைக் கூட்டத்தின் போது உறுப்பினர்களால் கேட்கப் படும் கேள்விகள் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என இந்தப் புதிய விதி கூறுகிறது.
- இது அவையில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான பதிலை வழங்கவும் சரியான தெளிவை அமைச்சர்கள் பெறவும் உதவும்.
- மற்றுமொரு புதிய விதிமுறையின்படி, துணைக் கேள்விகள் கீழ்க்காணும் ஏதேனும் சிக்கல்களைக் கொண்டிருந்தால் அக்கேள்வி முறையற்றது என சபாநாயகர் கூறலாம். அவையாவன,
  - ஒருவேளை அக்கேள்வி பிரதானக் கேள்வியிலிருந்து எழுப்பப் படவில்லையெனில்,
  - ஒருவேளை அது தகவல்களைக் கோருவதற்கு பதில் தகவல்களை வழங்கினால்,
  - ஒருவேளை அக்கேள்வி ஒரு கருத்தின் ஒப்புதலையே அல்லது நிராகரிப்பையோ வேண்டினால்,
  - ஒருவேளை அக்கேள்வியானது கேள்விகள் தொடர்பான ஏதேனும் ஒரு விதிகளை மீறினால்.
- மற்றுமொரு புதிய விதி விதான் சபாவின் (சட்டமன்றத்தின்) சபாநாயகரால் அமைக்கப்பட்ட குழுக்களானது பரிந்துரை செய்தால் அதன்மேல் சரியான காலத்தில் நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

# முக்கிய தினங்கள்

### உலக சுகாதார தினம் 2021 – ஏப்ரல் 07




- இத்தினம் நமது மருத்துவர்களின் தலையாயப் பங்களிப்பினையும் உலக சுகாதார அமைப்பின் வெற்றிகளையும் அங்கீகரிக்கும் வகையில் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப் படுகிறது.

- சுகாதாரம் என்பது உடல்நலம் மட்டுமின்றி மனம் மற்றும் சமூகம் சார்ந்த நலனுமாகும்.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலக சுகாதார தினத்தின் கருத்துரு, "சிறந்த, ஆரோக்கியமான உலகை உருவாக்குதல்" (Building a Fairer, healthier world) என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★